# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம்




▶ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம் நடந்தது.

விழுப்புரம், ஜூன் 12: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் வேலைவாய்ப்பு பிரிவு 2 நாட்கள் கேம்பஸ் டிரைவ்-2022, 1 மற்றும் 2 ஜூன் 2022 அன்று நடத்தியது. கேம்பஸ் டிரைவில், *Annexmed, Veranda Acacia, Indian Healthcare BPO, TVS Lucas, Cross Cold Solutions, SS Enterprises, Digi Connect, and Fox Conn India Pvt. Ltd* போன்ற எட்டு நிறுவனங்கள் பங்கேற்றன. நேர்காணலில் மொத்தம் 423 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர். நிறுவனங்கள் அனைத்து மாணவர்களுக்கும் சரியான அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. எழுத்துத் தேர்வு மற்றும் தனிப்பட்ட நேர்காணல் மூலம் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். 156 மாணவர்கள் முதல் சுற்றில் தேர்ச்சி பெற்று, அவர்கள் இரண்டாவது சுற்றில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளனர். தேர்வு செய்யப்பட்ட 67 மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு உத்தரவு கடிதம் வழங்கப்பட்டது.

தினகரன் - 12-06-2022

Scanned with OKEN Scanner



தெய்வானை அம்மாள் கல்லூரியில்

# சர்வதேச யோகா தினம்

விழுப்புரம்,ஜூன்.22–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கல்லூரி மைதானத்தில் சர்வதேச யோகா தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரியின் முதல்வர் அகிலா, துணை முதல்வர் பேராசிரியர் செல்வி, மாணவியர் புலமுதன்மையர் பேராசிரியர் ராஜேஷ்வரி, யோகா மாஸ்டர்வெங்கடேசன், கூடுதல் சேவை அமைப்புகளைச் சார்ந்த பேராசிரியர்கள் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். மேலும், பல்வேறு கூடுதல் சேவை அமைப்புக்களைச் சேர்ந்த 50 மாணவியர்கள் இந்நிகழ்வில் பங்கேற்று பயனடைந்தனர்.

மாலை மலர் 22-06-2022

Scanned with OKEN Scanner

மாலை முரசு 02.07.2022

# காலத்திற்கு ஏற்ற கல்வியை அளிக்கும் இ.எஸ்.எஸ்.கே. கல்விக்குழுமம்

விழுப்புரம் நகரில் 34 ஆண்டுகளாய், இளைஞர்களின் உயர்கல்விக்காக விழிப்போடு இயங்கி வருகின்ற E.S.S.Kகல்விக்குழுமம் சாமனியர்களையும் சாதனையாளர்களாக மாற்றிட வேண்டும் என்னும் முனைப்பில்,தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), E.S. செவிலியர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தெய்வானை அம்மாள் கல்வியியல் கல்லூரி ஆகிய கல்லூரிகளை நடத்தி வருகின்றது.


எஸ்.செந்தில் குமார்

ஸ்பெயின்,போர்ச்சுகல், மலேசியா ஆகிய நாடுகளின் புகழ் வாய்ந்த கல்வி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை(MOU)மேற்கொண்டு ஆசிரியர், மாணவப் பரிமாற்றம் மற்றும் ஆய்வுகளில் இணைந்து செயல்படல் ஆகியவற்றின் மூலம் சர்வதேசத் தரத்திலான கல்வியை அனைத்துத்தர மக்களுக்கும் கிடைப்பதற்கான வழிமுறைகளை செய்து வருகின்றோம்.

பல்கலைக்கழக மானியக்குழுவின்(UGC) வழி நெறிமுறைகளுக்கு ஏற்ப NPTEL SPOKEN TUTORIAL போன்ற இணைய வழி படிப்புகளைப் பட்டப்படிப்புடன் சேர்த்து மாணவர்கள் கற்றிட வாய்ப்புகளை உண்டாக்கியிருக்கிறோம். தேசியத் தர்ச்சான்றிதழில் (NAAC)'A' தகுதி DST FIST நிதி நல்கை ஆகியவற்றை பெற்று இளைஞர்களின் ஆற்றல்களை ஆராய்ச்சி திட்டங்களுக்குப் பங்களிக்கும்படி செய்து வருகின்றோம்.

கிராமம் நகரம் என்கிற வேறுபாடு கல்விதளத்தில் இருந்து களையப்பட வேண்டும் என்கிற அடிப்படையில் திறன் மிக்க தகுதி வாய்ந்த முனைவர் பட்டம் பெற்ற பேராசிரியர்களைக் கொண்டு கற்றல்–கற்பித்தல் செயல்பாடுகள் நிகழ உறுதி செய்து வருகின்றோம். மேலும் Visal Communication,Psychology;Journalism and Mass Communication,Coustume Design& Fashion,Clinical Nutrition and Dietetics,Biotechnology போன்ற நகர்ப்புறம் சார் பாடப்பிரிவுகளையும் அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக நடத்திவருகின்றோம்.

வளர்ந்து வரும் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப– கற்றல்–கற்பித்தல் செயல்பாடுகளை அடுத்த கட்டத்திற்கு முன்னகர்த்தும் வகையில் E. Content,கல்விக் காணொலி ஆகிய வசதிகளையும் உருவாக்கி வருகின்றோம். மாணவர்கள் பட்டப் படிப்பு முடித்த உடனேயே வேலை வாய்ப்புகளை பெற்றிட வேண்டும் என்கிற எண்ணத்தில் தொடர்ந்து வளாக நேர் முகத்தேர்வுகளை (Campus Interview) நடத்தி வருகின்றோம்.

Scanned with OKEN Scanner

மாலை முரசு - 02-07-2022

# E.S GROUP OF INSTITUTIONS

## MANAGED BY ESSK - VILLUPURAM.

### COURSES OFFERED

## B.Ed.

### U.G COURSES

B.Sc. Psychology
B.Sc. Visual Communication
B.Sc. Interior Design & Decor
B.Sc. Clinical Nutrition and Dietetics*
B.Sc. Costume Design and Fashion*
B.A. Journalism and Mass Communication*
B.Sc. Computer Science, B.Sc. Biochemistry
B.Sc. Physics, B.Sc.Chemistry, B.Sc.Biotechnology*
B.Sc. Mathematics, B.Sc. Botany
B.C.A. Computer Applications
B.Com. Commerce (General)
B.Com. with Computer Applications
B.Com. International Accounting & Taxation
B.B.A. Business Administration
B.A. Tamil, B.A. English & B.A. History

### NURSING COURSES

B.Sc Nursing, DGNM, ANM, DMLT, P.B.B.Sc Nursing
M.Sc Medical and Surgical Nursing
M.Sc Obstetric & Gynecology Nursing
M.Sc Community Health Nursing
M.Sc Mental Health Nursing
M.Sc Pediatric Nursing

### DIPLOMA COURSES

Civil Engineering
Computer Technology
Electronics and Communication Engineering
Electrical and Electronics Engineering
Mechanical Engineering

### P.G COURSES

M.Sc. Computer Science
M.Sc. Biochemistry
M.Sc. Chemistry, M.Sc. Physics
M.Sc. Mathematics
M.Com. Commerce (General)
M.A. Tamil & M.A. English

### RESEARCH PROGRAMME

M.Phil. Tamil, M.Phil. English
M.Phil. Commerce
M.Phil. Physics
M.Phil. Biochemistry
M.Phil. Chemistry
M.Phil. Mathematics
M.Phil. Computer Science
Ph.D. Tamil, Ph.D. Chemistry
Ph.D. Commerce, Ph.D. English
Ph.D. Mathematics
Ph.D. Computer Science
Ph.D. Biochemistry

*Subject to Approval of Annamalai University

04146 259674

For Admission Registration Scan to APPLY

www.esu.org.in

**THEIVANAI AMMAL COLLEGE FOR WOMEN**
(AUTONOMOUS) - VILLUPURAM.

**E.S ARTS & SCIENCE COLLEGE**
(CO-ED) - VILLUPURAM.

**THEIVANAI AMMAL COLLEGE OF EDUCATION**
(AFFILIATED TO TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY)

**E.S COLLEGE OF NURSING**
(Approved by Govt. of Tamil Nadu and Indian Nursing Council, New Delhi)

**E.S POLYTECHNIC COLLEGE**
(Approved by AICTE - New Delhi & Affiliated to DOTE Chennai)

**E.S MUSIC ACADEMY**
(AFFILIATED TO TAMIL NADU JAWAHAR BAL BHAVAN)

Scanned with OKEN Scanner



விழுப்புரம் இ.எஸ். பாலிடெக்னிக் கல்லூரி, எக்விடாஸ் டெவலப்மெண்ட் டிரஸ்ட் மற்றும் ராஜ் எஜிகேஷனல் சாரிட்டபிள் டிரஸ்ட் சார்பில் வேலைவாய்ப்பு முகாம் நடந்தது.

# விழுப்புரம் இ.எஸ். பாலிடெக்னிக் கல்லூரில் வேலைவாய்ப்பு முகாம்

**விழுப்புரம், ஜூலை 4–**

விழுப்புரம் இ.எஸ். பாலிடெக்னிக் கல்லூரி எக்விடாஸ் டெவலப் மெண்ட் டிரஸ்ட் மற்றும் ராஜ் எஜிகேஷனல் சாரிட் டபிள் டிரஸ்ட் சார்பில் வேலைவாய்ப்பு முகாம் நடந்தது.

இ.எஸ்.எஸ்.கே. கல்வி குழும தாளாளர் செந்தில் குமார் விழாவை துவக்கி வைததார். துணை பதிவா ளர் தியாகராஜர் சிறப்பு ரையாற்றினார். கல்லூரி முதல்வர் சக்திவேல் வர வேற்றார்.

விழுப்புரம் நகர மன்ற தலைவி தமிழ்செல்வி சிறப்புரையாற்றினார். விழுப்புரம் நகராட்சி ஆணையர் சுரேந்திரஷா பங்கேற்ற பேசினார்.

வேலை வாய்ப்பு முகா மில் டி.வி.எஸ்., சுந்தரம் பிரேக் லைனிங் கம்பெனி, ராயல் என்பீல்ட், மதர்சன், ஸ்ரீராம் எண்டர்பிரைசஸ், பந்தன் வங்கி, பார் டெக் னிக்கல் ஸ்கில்ஸ், எல். பி.ஐ. லைப் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட கம்பெ னிகள் கலந்து கொண்டன.

நேர்காணல் மூலம் மாணவர்களை தேர்வு செய்தனர். முகாமில் பங் கேற்ற 300க்கும் மேற்பட் டோரில் 150 பேர் தேர்வு செய்யப்பட்டு, கல்லூரி முதல்வர் மூலம் பணி நிய மன ஆணையை பெற்றுக் கொண்டனர்.

எக்ஸ்னோ தலைவர் கனகராஜ், சென்னை ஈக் விட்டாஸ் வங்கி வேலை வாய்ப்பு அதிகாரி குண சேகரன், விழுப்புரம் செயலாளர் பாலசந்திரன், எக்ஸ்னோ தலைமை ஒருங் கிணைப்பாளர் கிருஷ்ண குமார், இயக்குநர் கும ரன் இணைந்து வேலை வாய்ப்பு முகாமினை நடத் தினர். முதலாம் ஆண்டு துறை தலைவர் புஷ்கலாம் பாள் தொகுத்து வழங்கி னார்.

இ.எஸ்., பாலிடெக்னிக் கல்லூரி துணை முதல்வர் ரமேஷ் நன்றி கூறினார்.

தினமலர் 04.07.2022

தினமலர் 04-07-2022

# விழுப்பு

**விழுப்புரம், ஜூலை**

விழுப்புரத்தில்
முறையாக அமை
பட்ட 7 மையங்களி
தேர்வு நேற்று நடந்
மருத்துவ படி
கான நீட் நுழைவு
நாடு முழுவதும்
நடந்தது. கடந்த
களில் நீட் தேர்வு எ
தேர்வு மையங்கள்
யலில் விழுப்புரம் ப
டம் இடம்பெறவில்

தினத்தந்தி - 05-07-2022

விழுப்புரம்

# இ.எஸ். பாலிடெக்னிக் கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம்



விழுப்புரம், ஜூலை.5-

விழுப்புரம் இ.எஸ். பாலிடெக்னிக் கல்லூரி எக்விடாஸ் டெவலப்மெண்ட் டிரஸ்ட் மற்றும் ராஜ் எஜிகேஷனல் சாரிட்டபிள் டிரஸ்ட் சார்பில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. முகாமை இ.எஸ்.எஸ்.கே. கல்விக்குழும தாளாளர் செந்தில்குமார் தொடங்கி வைத்தார். துணைப்பதிவாளர் தியாகராஜன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் சக்திவேல் வரவேற்றார். விழுப்புரம் நகரமன்ற தலைவர் தமிழ்செல்வி, நகராட்சி ஆணையர் சுரேந்திரஷா ஆகியோர் சிறப்புரையாற்றினர். முகாமில் 50-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கலந்து கொண்டு நேர்காணல் மூலம் மாணவர்களை தேர்வு செய்தனர். முகாமில் பங்கேற்ற 300-க்கும் மேற்பட்டோரில் 150 பேர் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

இம்முகாமை எக்ஸ்னோரா தலைவர் கனகராஜ், சென்னை எக்விடாஸ் வங்கி வேலைவாய்ப்பு அதிகாரி குணசேகரன், விழுப்புரம் செயலாளர் பாலச்சந்திரன், எக்ஸ்னோரா தலைமை ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணகுமார், இயக்குனர் குமரன் ஆகியோர் இணைந்து நடத்தினர். முகாமை முதலாம் ஆண்டு துறைத்தலைவர் புஷ்கலாம்பாள் தொகுத்து வழங்கினார். முடிவில் இ.எஸ். பாலிடெக்னிக் கல்லூரி துணை முதல்வர் ரமேஷ் நன்றி கூறினார்.

Scanned with OKEN Scanner

தினமலர் - 18.07.2022

# விழுப்புரத்தில் 7 மையங்களில் நீட் தேர்வு

**விழுப்புரம், ஜூலை 18–**

விழுப்புரத்தில் முதல் முறையாக அமைக்கப் பட்ட 7 மையங்களில் நீட் தேர்வு நேற்று நடந்தது.

மருத்துவ படிப்பிற் கான நீட் நுழைவு தேர்வு நாடு முழுவதும் நேற்று நடந்தது. கடந்த காலங் களில் நீட் தேர்வு எழுதும் தேர்வு மையங்கள் பட்டி யலில் விழுப்புரம் மாவட் டம் இடம்பெறவில்லை.

முதல்முறையாக இந் தாண்டு நீட் தேர்வு நடை பெறும் மையங்கள் பட்டிய லில்விழுப்புரம்மாவட்டம் இடம்பெற்றது. கொங் கராம்பாளையம் ஐ.எப். டி. பொறியியல் கல்லூரி, தெய்வானை அம்மாள் பாலிடெக்னிக் கல்லூரி, அக் ஷரதம் பள்ளி, ஏ.ஆர்., பொறியியல் கல்லூரி, வள வனூர் ஜான் டூயி பள்ளி, தூய இருதய மேல்நிலைப் பள்ளி, இ.எஸ்., கலை அறி வியல் கல்லூரி ஆகிய 7 மையங்களில் நீட் தேர்வு நேற்று நடந்தது.



விழுப்புரம் மாவட்டம் தெய்வானை அம்மாள் கல்லூரியில் நடைபெற்ற நீட் தேர்வு எழுத சென்ற மாணவிகளின் புகைப்படங்களை சரிபார்த்து உள்ளே அனுப்பிய அலுவலர்கள்.

தேர்வு மையங்களில் துப்பாக்கி ஏந்திய போலீ சாரின் பாதுகாப்பு போடப் பட்டிருந்து.

நேற்று காலை 11:30 மணிக்கு பின் மாணவர் கள் தேர்வு வளாகத்திற்குள் அனுமதிக்கப்பட்டனர். முன்னதாக மாணவிகள் கையில் அணிந்திருந்த வளையல், செயின், கம் மல் உள்ளிட்டவற்றை கழற்றி பெற்றோரிடம் கொடுத்து விட்டு, ஹால் டிக்கெட், ஆதார் அட்டை, குடிநீர் பாட்டிலுடன் தேர்வு அறைக்கு சென்ற னர். ஒவ்வொரு மாணவ மாணவியரும் தீவிர சோத னைக்கு பிறகு அனுமதிக் கப்பட்டனர்.

Scanned with OKEN Scanner

# இ.எஸ். செவிலியர் கல்லூரியில் பட்டய சான்றிதழ் வழங்கும் விழா




விழுப்புரம் இ.எஸ்., செவிலியர் கல்லூரியில் டிப்ளமோ செவிலியர் முடித்த மாணவிகளுக்கு பட்டய சான்றிதழ் வழங்கும் விழா நடந்தது.

**விழுப்புரம், ஜூலை 22–**

இ.எஸ்., செவிலியர் கல்லூரியில் டிப்ளமோ செவிலியர் படிப்பு முடித்தவர்களுக்கு பட்டய சான்றிதழ் வழங்கும் விழா நடந்தது.

விழுப்புரம் இ.எஸ்., செவிலியர் கல்லூரியில் டிப்ளமோ செவிலியர் (டி.ஜி.என்.எம்.,) மற்றும் ஏ.என்.எம்., கடந்த 2018–2020ம் ஆண்டு முடித்த மாணவ, மாணவியர்களுக்கு பட்டய சான்றிதழ் வழங்கும் விழா நடந்தது.

பொருளாளர்விக்ரம்ஹரிஹரன், துணைப் பதிவாளர் தியாகராஜன் தலைமையில் சான்றிதழ் வழங்கப்பட்டது. கல்லூரி முதல்வர் பொற்செல்வி முன்னிலை வகித்தார். துணை முதல்வர் கார்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சான்றிதழ் பெற்றவர்கள் செவிலியர் துறையில் நன்கு பணியாற்ற வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது.

தினமலர் – 22.07.2022

Scanned with OKEN Scanner

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் புதுமுக ஒருங்கிணைத்தல் விழா




தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், மாணவர்களின் புதுமுக ஒருங்கிணைத்தல் விழா நடந்தது.

**விழுப்புரம், ஆக. 7–**

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், மாணவர்களின் புதுமுக ஒருங்கிணைத்தல் விழா நடந்தது.

கல்லூரி முதல்வர் அகிலா தலைமை தாங்கி, கல்வி பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஆன் லைன் படிப்பு, இடை நிலை படிப்பு உள்ளிட்ட கல்வி செயல்பாடுகள் குறித்து பேசினார்.

இ.எஸ்.எஸ்.கே., கல்வி அறக்கட்டளை துணைப் பதிவாளர் தியாகராஜன் சிறப்புரையாற்றினார். தமிழ்த்துறை உதவி பேராசிரியர் மணிகண்டன் அறிமுக உரையாற்றினார்.

துணை முதல்வர் செல்வி, ஆராய்ச்சி புலம் பேராசிரியை கலைமதி, தேர்வு கட்டுப்பாட்டாளர் ஸ்ரீதேவி, வேலை வாய்ப்பு அலுவலர் முத்துராஜா உள்ளிட்டோர் கல்லூரியின் வேலை வாய்ப்பு செயல்பாடுகள், உட்கட்டமைப்பு, கல்வி செயல்பாடுகள் குறித்து விளக்கினர்.

முன்னதாக மாணவியர் புல முதன்மையர் ராஜேஸ்வரி வரவேற்றார். இளங்கலை முதலாம் ஆண்டு மற்றும் முதுகலை முதலாம் ஆண்டு மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தது.

தினமலர் – 07-08-2022

Scanned with OKEN Scanner

### தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# மாணவர்கள் புதுமுக ஒருங்கிணைத்தல் விழா




▶ தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவர்கள் புதுமுக ஒருங்கிணைத்தல் விழா நடந்தது.

**விழுப்புரம், ஆக. 6:** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி கருத்தரங்கில் "மாணவர்கள் புதுமுக ஒருங்கிணைத்தல் விழா" நடந்தது.

இஎஸ்எஸ்கே கல்வி அறக்கட்டளை துணைப் பதிவாளர் தியாகராஜன் சிறப்புரையாற்றினார். கல்லூரியின் தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் மணிகண்ணன் கல்லூரியின் அறிமுகத்தினை தொடங்கி வைத்தார்.

கல்லூரி முதல்வர் முனைவர் அகிலா தலைமையுரை ஆற்றினார். இதில் கல்லூரி துணை முதல்வர் பேராசிரியர் செல்வி கருத்துரை வழங்கினார். ஆராய்ச்சி புலமுதன்மை முனைவர் கலைமதி ஆய்வு செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார். தேர்வுக் கட்டுப்பாட்டாளர் பேராசிரியர் ஸ்ரீதேவி கல்லூரியின் உள்கட்டமைப்பு வசதிகளை எடுத்துரைத்தார். வேலைவாய்ப்பு அலுவலர் முத்துராஜா கல்லூரியின் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார். மாணவியர் புலமுன்மையர் பேராசிரியர் ராஜேஸ்வரி வரவேற்புரை ஆற்றினார். கல்விப்புல முதன்மையர் முனைவர் தனலட்சுமி நன்றி கூறினார்.

இளங்கலை முதலாமாண்டு மற்றும் முதுகலை முதலாமாண்டு மாணவர்களுக்காக பல்வேறு விளையாட்டு போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

தினகரன் - 06-08-2022

Scanned with OKEN Scanner

# இ.எஸ்., பாலிடெக்னிக் கல்லூரி முதலாம் ஆண்டு துவக்க விழா




விழுப்புரம் இ.எஸ்., பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாம் ஆண்டு துவக்க விழா நடந்தது.

**விழுப்புரம், ஆக. 10–** விழுப்புரம் இ.எஸ்., பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாம் ஆண்டு வகுப்பு துவக்க விழா நடந்தது.

இ.எஸ்.எஸ்.கே., கல்விக் குழும தாளாளர் செந்தில்குமார் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். துணைப் பதிவாளர் தியாகராஜன் சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் சக்திவேல் வரவேற்றார். இயந்திரவியல் துறைத் தலைவர் ரவி விளக்கவுரையாற்றினார்.

கடந்த ஆண்டு கல்லூரியில் முதல் 3 இடம் பிடித்த தினேஷ், மதிமலர், லட்சுமி ஆகியோருக்கு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

முதலாம் ஆண்டு மற்றும் நேரடி இரண்டாம் ஆண்டு மாணவர்கள், பெற்றோர்கள் பங்கேற்றனர். கல்லூரி துணை முதல்வர் ரமேஷ் நன்றி கூறினார். சிவில் இன்ஜினியரிங் துறை தலைவர் நிவேதா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

தினமலர் - 10.08.2022.

Scanned with OKEN Scanner

# திறனை வளர்த்து கொண்டால் சாதனை மாணவராகலாம்

## சென்னை இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி சேர்மன் ஸ்ரீராம் பேச்சு

**விழுப்புரம், ஆக. 22–**

ஒவ்வொரு மாணவரும் திறனை வளர்த்து கொண்டால், சாதாரண மாணவரும் சாதனை மாணவராகலாம் என சென்னை இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி சேர்மன் ஸ்ரீராம் பேசினார்.

விழுப்புரம் தெய்வானையம்மாள் கல்லூரியில், தினமலர் சார்பில் நடந்த உங்களால் முடியும் நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது;

டிஜிட்டல் டெக்னாலஜியில் அதிக வேலைவாய்ப்பு உருவாகி உள்ளது. இது மிகப்பெரிய சவால்களை கம்பெனிகளுக்கு கொடுத்துள்ளது. புதிய ஆட்களை தேர்வு செய்வது, பயிற்சி கொடுத்து தொழிலில் வெற்றி பெறுவது சவாலாக உள்ளது.

பெரிய கம்பெனிகள், நல்ல பொறியியல் கல்லூரிகளுடன் இணைந்து, எதிர்கால வேலை தேவை இருக்கிறதோ அந்த வேலைக்கு தகுந்த பாடதிட்டத்தை தயாரிப்பதுடன், கல்லூரியில் அதற்கு தேவையான லேப்களை கல்லூரிகளில் உருவாக்கி, பயிற்சியும் அந்த கம்பெனிகளே அளிக்கிறது. கல்லூரி முடித்து வெளியே வரும்போதே, வேலைக்கு எடுத்து கொள்கின்றனர்.



ஸ்ரீராம்

சென்னை இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி தனியார் நிறுவனத்துடன் இணைந்து 100 மாணவர்களுக்கு இதுபோன்ற திறன் பயிற்சிகளை அளித்து வருகிறது. டிஜிட்டல் வேலைகள் புதிது புதிதாக உருவாகி வருவதால், பல புதிய பாட பிரிவுகளும் வந்துள்ளது.

தற்போதைய நவீன படிப்புகளுக்கு கல்லூரிகளில் தேவையான புதிய லேப், நவீன தொழில்நுட்ப கருவிகள், தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு இருக்க வேண்டும்.

அத்தகைய கல்லூரிகளை தேர்வு செய்து படித்தால் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

மொபைல் போன் முதல் கார் சிப் வரை தயாரிக்க இந்தியாவில் பல கம்பெனிகள் வர உள்ளது.

கார் டிசைன், எலட்ரிக்கல் பைக் கன்ட்ரோல் சிஸ்டம் என பல பணிகள் புதிதாக உருவாகி உள்ளது. சோலார், பாதுகாப்பு துறை, ட்ரோன் துறைகள் வளர்ச்சி பெற்றுள்ளது.

மருத்துவம் படித்தால் நல்வாழ்க்கை கிடைக்கும் என நினைத்து படிக்கின்றனர்.

அதை விட பொறியியலில் சாதிக்க முடியும். மருத்துவம் போல் அதே கடின உழைப்புடன் பொறியியல் படித்தால் மருத்துவ துறையை விட பல சாதனை செய்ய முடியும். ஒவ்வொரு மாணவரும் திறனை வளர்த்து கொண்டால் சாதனை மாணவராகலாம். என பேசினார்.

தினமலர் - 22-08-2022

Scanned with OKEN Scanner






■ தினமலர் மற்றும் சென்னை இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி இணைந்து விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடத்திய உங்களால் முடியும் நிகழ்ச்சியை கல்வி ஆலோசகர் ஜெயப்பிரகாஷ் காந்தி குத்து விளக்கேற்றி துவக்கிவைத்தார். அருகில் கிண்டி பொறியியல் கல்லூரி பேராசிரியர் நாகராஜன், சென்னை இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி தலைவர் ஸ்ரீராம், தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி செயலாளர் செந்தில்குமார். ■ நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள்.

## 'தினமலர்' உங்களால் முடியும் நிகழ்ச்சி

# விரும்பிய பாட பிரிவு கிடைக்க கடந்தாண்டு 'கட் ஆப்' பார்க்க வேண்டும்

## அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் நாகராஜன் அறிவுரை

**விழுப்புரம், ஆக. 22–** மாணவர்கள் விரும்பிய பாட பிரிவுக்கு கடந்த ஆண்டு கட்ஆப் மதிப்பெண்ணை தெரிந்து கொண்டு தேர்வு செய்ய வேண்டும் என அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் நாகராஜன் கூறினார்.

விழுப்புரம், தெய்வானையம்மாள் கல்லூரியில், தினமலர் மற்றும் சென்னை இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி சார்பில் நடந்த உங்களால் முடியும் நிகழ்ச்சியில், இன்ஜினியரிங் கவுன்சிலிங் நடைமுறைகள் என்ற தலைப்பில், பேராசிரியர் நாகராஜன் பேசியதாவது; பொறியியல் படிப்பிற்கான கலந்தாய்வு 4 பிரிவுகளாக நடத்தப்படுகிறது.

விருப்பப் பாடத்தை தேர்வு செய்வதிற்கு முன்பு, தான் விருப்பும் கல்லூரியில் விருப்பப் பாடம் உள்ளதா என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

சரியான கல்லூரியை தேர்வு செய்யுங்கள். தான் விரும்பும் கல்லூரியில் உள்ள பாட பிரிவுக்கு கடந்த வருட கட் ஆப் எவ்வளவு என தெரிந்து கொண்டு, தற்போதைய கட் ஆப், இடஒதுக்கீடுக்கு ஏற்ப பாட பிரிவுகளை தேர்வு செய்யுங்கள்.



பேராசிரியர் நாகராஜன்

வரும் 25ம் தேதி முதல் கலந்தாய்வு துவங்கும். அப்போது, 3 நாட்களுக்குள் கட் ஆப் ரேங்க், இட ஒதுக்கீடு விருப்ப கல்லூரியில் பாட பிரிவை தேர்வு செய்து கொள்ளலாம். மறுநாள் விரும்பிய பாடத்திற்கான சீட் ஒதுக்கப்படும். அதை மாணவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். உறுதி செய்யவில்லை என்றால் அந்த சீட் ரத்தாகும். 6வது நாள் சீட் ஒதுக்கீடு ஆணை கிடைக்கும். அதை வைத்து 7 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட கல்லூரியில் நேரில் ஆஜராகி கட்டணம் செலுத்தி அட்மிஷன் பெற வேண்டும்.

தனக்கு விரும்பிய பாட பிரிவு கிடைக்க காத்திருக்க விரும்பினால், அருகில் உள்ள டி.எப்.சி., மையத்தை தொடர்பு கொள்ளலாம். தமிழகத்தில் 110 டி.எப்.சி. மையம் இயங்கி வருகிறது. ஒரு மாணவர் 2500 பாட பிரிவுகளை கூட தேர்வு செய்து கொள்ளலாம்.

விருப்ப பாட தேர்வு அதிக அளவில் கொடுக்க வேண்டும். 5 பாட பிரிவு மட்டும் கொடுத்து விட்டு, கடைசியில் கிடைக்க வில்லை என இருக்க கூடாது.

அதுபோல் மாணவர்கள் விரும்பிய பாட பிரிவை, கல்லூரி, பாட பிரிவு, மாவட்டம், சுயநிதி, அரசு கல்லூரி என பல முறையில் பில்டர் செய்த கொள்ளலாம் என கூறினார்.

தினமலர் _ 22-08-2022

Scanned with OKEN Scanner

# க்ளவுட் கம்ப்யூட்டிங் துறைக்கு எதிர்காலத்தில் அதிக வேலை வாய்ப்பு

## கல்வி ஆலோசகர் ஜெயப்பிரகாஷ் காந்தி தகவல்

விழுப்புரம், ஆக. 22–

உலகம் முழுவதும் டிஜிட்டலாக மாறிக் கொண்டிருப்பதால், டிஜிட்டல் சர்கியூட், குவன்டம் கம்யூட்டிங், க்ளவுட் கம்ப்யூட்டிங் துறைக்கு எதிர்காலத்தில் அதிக வேலை வாய்ப்பு உள்ளது என கல்வி ஆலோசகர் ஜெயப்பிரகாஷ் காந்தி பேசினார்.

தினமலர் நாளிதழ் சார்பில், உங்களால் முடியும் நிகழ்ச்சி விழுப்புரம், சென்னை – திருச்சி சாலை, தெய்வாணையம்மாள் கல்லூரியில் நேற்று நடந்தது.

இதில், கல்லூரி பாட பிரிவுகள் என்ற தலைப்பில், கல்வி ஆலோசகர் ஜெயப்பிரகாஷ் காந்தி பங்கேற்று பேசுகையில்;

இந்தாண்டு பொறியியல் படிப்பில் சேர்ந்து 2026ம் ஆண்டு வெளியே வரும்போது பெரிய சவால் காத்திருக்கிறது. காரணம் அனைத்து மாணவர்களும் ஒரே பாட பிரிவை தேர்வு செய்து படிப்பது. மொத்த பொறியியல் படிப்பில் 50 சதவீதம் கம்ப்யூட்டர் சயின்ஸ் தான். இத்தனை பேரும் படித்து முடித்து வெளியே வந்தால் வேலை வாய்ப்பு கிடைக்குமா என்பதை சிந்திக்க வேண்டும். பொறியியலுக்கு வாய்ப்புகள் உள்ளது.

ஆனால், ஒரு குறிப்பிட்ட பிரிவுக்கு மட்டும் கிடையாது. மல்டி டிசிபிலனரிக்கு தான் வாய்ப்பு. உலகம் முழுவதும் டிஜிட்டலாக மாறப்போகிறது. புரோகிராமிங் லாங்குவேஜ் மட்டும் போதாது.



ஜெயப்பிரகாஷ் காந்தி

படிப்பை தாண்டி பல டெக்னாலஜி வளர்ந்து வருகிறது. கல்லூரியில் சேரும் மாணவருக்கு தற்போதுள்ள சந்தர்ப்பம், சூழ்நிலை, வேலை வாய்ப்பு, தொழில்நுட்பம் முழுவதும் மாறி இருக்கும்.

இதை புரிந்து கொண்டால் தவறு செய்ய மாட்டார்கள். வாய்ப்பை தேடி செல்பவன் வெற்றி பெறுவார். கம்ப்யூட்டர் சயின்ஸ், டிஜிட்டல் சர்கியூட், குவன்டம் கம்ப்யூட்டிங், க்ளவுட் கம்ப்யூட்டிங் இன்டர்கிரேட் செய்பவர்களுக்கு எதிர்காலத்தில் அதிக வேலை வாய்ப்பு உள்ளது.

கம்ப்யூட்டர் சையின்ஸ் எடுத்தால், தன் துறை சார்ந்து தன் திறன்களை அப்டேட் செய்து கொண்டே இருக்க வேண்டும். டெக்னாலஜி விஸ்வரூபமாக மாறி வருகிறது.

அதனால் கல்லூரியை தேர்வு செய்யும்போது, நவீன தொழில்நுட்ப லேப் இருக்கிறதா, திறன் வளர்ச்சி பயிற்சி அளிக்கப்படுகிறதா, பாட திட்டங்களை தாண்டி திறன் கற்று தரப்படுகிறதா என்பதை தெரிந்து கொண்டு சேருங்கள்.

வரும் 2026ம் ஆண்டுகளில் கல்லூரியில் நடத்தும் போட்டிகள் மூலமே வேலை வாய்ப்புக்கு ஆட்கள் எடுப்பர். பாட பிரிவை தேர்வு செய்யும் போது, முதல் கட்டமாக இ.சி.இ., கம்ப்யூட்டர், ஐ.டி. என்ற வரிசையில் தேர்வு செய்யலாம்.

ரப்பர், செராமிக், பார்மா, தயாரிப்பு உள்ளிட்ட சில பாட பிரிவுகளை கடைசியாக வைத்து கொள்ளுங்கள். சிலர் வித்தியாசமாக பாடத்தை தேர்வு செய்து இன்று வேலை வாய்ப்பு இன்றி கிடக்கின்றனர்.

நீங்கள் எந்த பாட பிரிவை தேர்வு செய்தாலும், கூடுதலாக என்ன படிக்கிறீர்களோ அதை பொறுத்தே வேலை வாய்ப்பு மற்றும் சம்பளம் நிர்ணயிக்கப்படும்.


பாட பிரிவுகளை தேர்வு செய்வதற்கு முன்பு எந்தெந்த கல்லூரி, எந்த பாட பிரிவுகள் விருப்பம் என்பதை முதலில் சார்ட் தயாரிக்க வேண்டும். கல்லூரியை தேர்வு செய்த பின்பு, அதற்குரிய கட்டணம் உள்ளிட்ட விபரங்களை தெரிந்து வைத்து கொள்ளுங்கள். அப்வேர்ட் மூமண்ட் முறையில் காத்திருந்தால், அதில் கிடைக்கும் பாட பிரிவே இறுதியானது.

அதை மாற்ற முடியாது என கூறினார்.

தினமலர்
22-08-2022

Scanned with OKEN Scanner

# பரதநாட்டியம் அரங்கேற்றம்



■ விழுப்புரத்தில், இ.எஸ்., மியூசிக் அகாடமியில் பரதம் பயின்ற மாணவிகளின் அரங்கேற்ற விழா, தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்தது.

**விழுப்புரம், ஆக. 25–**

விழுப்புரத்தில், இ.எஸ். மியூசிக் அகாடமியில் பரதம் பயின்ற மாணவிகள் அரங்கேற்ற விழா நடந்தது.

தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சிக்கு, சிறப்பு விருந்தினர் உடுமலை செந்தில், பரதநாட்டியத்தின் பல்வேறு நுட்பங்கள் குறித்தும், இ.எஸ்., மியூசிக் அகாடமியின் சேவையையும் பாராட்டினார்.

இ.எஸ்.மியூசிக் அகாடமி நிறுவனர் செந்தில்குமார், கலைகள் மனித வாழ்க்கையில் நம்பிக்கை வளர்க்கும் பாங்கு, வெளிநாடுகளில் பரத கலை பெறும் தனித்துவம், நாட்டிய கலையினால் கிடைக்கும் பணிவாய்ப்புகள், மரபு கலைகளுக்கு உயிரூட்ட வேண்டியதன் அவசியம் குறித்து பேசினார்.

மாணவிகள் வைஷ்ணவி செல்வகுமார், தரணி, விஷ்ணுபிரியா, விகாஷ்னி ஆகியோரின் பரதநாட்டியம் அரங்கேற்றம் நடந்தது.

இ.எஸ்., மியூசிக் அகாடமி பரத நாட்டிய ஆசிரியர் ஜெயக்கூத்தன், இசை ஆசிரியர் சரோஜா கிருஷ்ணன், கீ போர்ட் ஆசிரியர் மார்ட்டின் உட்பட பலர் பங்கேற்றனர்.

தினமலர் 25-08-2022

Scanned with OKEN Scanner

தினமலர் 21-08-2022

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் ஆசிரியர்களுக்கு 2 நாள் பயிற்சி




விழுப்புரம், தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் அறிவியல் ஆசிரியர்களுக்கான பயிற்சி நடந்தது.

**விழுப்புரம், ஆக. 27–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் அறிவியல் ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி நிறைவு விழா நடந்தது.

கல்லூரி துணை முதல்வர் செல்வி வரவேற்றார். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுரேஷ், கல்லூரி முதல்வர் அகிலா அறிமுகவுரையாற்றினர்.

புதுச்சேரி நபார்டு வங்கி இணை இயக்குனர் பாலமுருகன் தலைமை தாங்கி பேசுகையில், 'ஆசிரியர்கள், மாணவர்களுக்கு கல்வி மட்டுமின்றி, கடமை, சமூக சிந்தனை, வேலைவாய்ப்பு, அறிவியல் சார்ந்த நிலைகளில் ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். உயர்கல்வியில் கற்க வேண்டிய கல்வியை சிறு வகுப்பிலேயே கற்கின்ற சூழல் உள்ளதால் ஆசிரியர்கள் அதற்கு ஏற்ப தங்களை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்' என்றார்.

பயிற்சியில் பங்கேற்ற 50 அரசு பள்ளி ஆசிரியர்கள், பயிற்சி அளித்த தெய்வானை அம்மாள் கல்லூரி பேராசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. ஆராய்ச்சி புல முதன்மையர் கலைமதி நன்றி கூறினார்.




விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரியில் கலைத்துறை பேரவை துவக்க விழா நடந்தது.

# மகளிர் கல்லூரியில் பேரவை துவக்க விழா

தினமலர்
12.09.2022

**விழுப்புரம், செப். 12–** தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கலைத் துறை சார்பில் பேரவை துவக்க விழா நடந்தது.

திருச்சி நேஷனல் கல்லூரி வணிக நிர்வாகத் துறை பேராசிரியர் சந்திரா சிறப்பு விருந்தினராக பங்கேற்று, நேர மேலாண்மை வாழ்க்கை மேலாண்மை, சிவில் சர்வீஸ் தேர்வு, திட்டமிடல் குறித்து சிறப்புரையாற்றினார். இ.எஸ். கல்விக் குழும துணை பதிவாளர் தியாகராஜன் வாழ்த்திப் பேசினார்.

கல்லூரி முதல்வர் அகிலா சிறப்புரையாற்றினார். தமிழாய்வுத் துறை மாணவி ஹஸ்மத் நிஷா, வணிகவியல் துறை மாணவி வர்ஷா, வணிக நிர்வாகத் துறை மாணவி அபர்ணா, ஆங்கிலத்துறை மாணவி ஹஸ்னா, துறை சார்ந்த ஆண்டறிக்கை சமர்ப்பித்தனர். மாணவி வர்ஷா நன்றி கூறினார்.

Scanned with OKEN Scanner

தினமலர் 20-09-2022




இ.எஸ்., செவிலியர் கல்லூரியில் மாநில அளவிலான ஆராய்ச்சி கருத்தரங்கு நடந்தது.

# இ.எஸ்., செவிலியர் கல்லூரியில் மாநில அளவிலான கருத்தரங்கு

**விழுப்புரம், செப். 20–**

விழுப்புரம் இ.எஸ்., செவிலியர் கல்லூரியில், ஆராய்ச்சி செயல் முறை ஒரு கண்ணோட்டம் என்ற தலைப்பில், 5வது மாநில அளவிலான கருத்தரங்கு நடந்தது.

இ.எஸ்., கல்விக் குழும துணை பதிவாளர் தியாகராஜன் முன்னிலை வகித்தார். கல்லூரி துணை முதல்வர் கார்த்திக் வரவேற்றார். முதல்வர் பொற்செல்வி கருத்தரங்கு மைய கருத்து குறித்து விளக்கினார்.

சிறப்பு விருந்தினர், திருவண்ணாமலை விக்னேஷ் செவிலியர் கல்லூரி முதல்வர் டாக்டர் விஜயலட்சுமி பேசுகையில், 'ஆராய்ச்சி என்பது முன்னேற்றத்திற்கு தேவையான ஒன்று, ஆராய்ச்சியின் காரணமாகத்தான் மூச்சு கொடுக்கும் கருவி 'ஆம்பு பேக்' இன்று வெண்டிலேட்டராக பல விதமான கூடுதல் வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறையின் முன்னேற்றத்திற்கு ஆராய்ச்சி மிக முக்கியம்' என்றார்.

கருத்தரங்கில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 237 ஆசிரியர், செவிலியர்கள் மற்றும் 387 மாணவர்கள் பங்கேற்றனர்.

Scanned with OKEN Scanner

### கிராமப்புறத்தை சேர்ந்த பெண்களுக்கு

# சர்வதேச தரத்திலான கல்வியை வழங்கும் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி



இ.எஸ்.செந்தில்குமார்

விழுப்புரம் மாநகரில் 34 ஆண்டுகளாக, இளைஞர்களின் உயர்கல்வி மேம்பாட்டிற்காகவிழிப்போடு இயங்கி வருகிற இ.எஸ்.எஸ்.கே. கல்விக்குழுமம், சாமானிய மக்களின் பிள்ளைகளையும்சாதனையாளர்களாகமாற்றிட வேண்டும் என்ற முனைப்பில், தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), இ.எஸ். செவிலியர் கல்லூரி, இ.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தெய்வானை அம்மாள் கல்வியியல் கல்லூரி ஆகிய கல்லூரிகளை சேவை நோக்குடன் நடத்தி வருகிறது.

## பெண்களுக்கான உயர்கல்வி

இ.எஸ். கல்வி குழுமத்தை 1983-ல் தோற்றுவித்த இ. சாமிக்கண்ணு, அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் முன்னாள் செயற்குழு உறுப்பினர் எனும் சிறப்பு தகுதி நிலையை பெற்றவர். கிராமப்புற பெண்களின் கல்விக்காக சேவை மனப்பான்மையுடன் இயங்கி வருபவர், பெண்களுக்கான உயர்கல்வியை பெறச்செய்து அவர்களை தன்னம்பிக்கை உடையவர்களாக மாற்றுவது, அவரது தொலைநோக்கு பார்வையாகும்.

இதை நினைவாக்க கல்லூரி செயலாளர் எஸ். செந்தில்குமார், செயல் திறத்துடன் அக்கறையுடன் செயல்பட்டு வருகிறார். இவரது அதிசிறந்த கல்வி சேவையினால் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் கல்விக்குழு உறுப்பினராக தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## தேசிய தரச்சான்றிதழ்

குடும்பம், சமூகம் மற்றும் தேசத்தில் உண்டாகும் சவால்களை ஏற்கத்தயாராக இருக்கும் வலிமையான பெண்களை உருவாக்க கல்லூரியை முழு தகுதித்திறம் வாய்ந்ததாக உருவாக்கிய பெருமைக்குரியவர். தேசிய தரச் சான்றிதழில் 3 முறை (நாக்) ஏ தகுதி, அடல் தரவரிசையில் செயல்திறன் மிக்க கல்விக் குழுமத்திற்கான சான்று, இந்தியாவில் தலைச்சிறந்த கல்லூரிகளுக்கான Education world இதழின் 83 தரவரிசை மதிப்பு, DIST FIST நிதி நல்கை ஆகியவற்றை பெற்று இளைஞர்களின் ஆற்றல்களை ஆராய்ச்சி திட்டங்களில் பங்களிக்கும்படி செய்து வருகிறது.

கிராமம், நகரம் என்கிற வேறுபாடுகளை கல்வித்தளத்தில் இருந்து களைய வேண்டும் என்கிற உயரிய நோக்கத்துடன் திறன் மிக்க, தகுதியும் அனுபவமும் வாய்ந்த, முனைவர் பட்டம் பெற்ற பேராசிரியர்களை கொண்டு கற்றல்- கற்பித்தல் செயல்பாடுகள் நிகழ உறுதி செய்து வருகிறது.

மேலும் visual communication, psychology. Journalism and mass communication, clinical nutrition and dietetics, food science, costume design and fashion போன்ற நகர்ப்புறம் சார்ந்த பாடப்பிரிவுகளையும் அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக நடத்தி வருகிறது.

## சர்வதேச தரத்திலான கல்வி

துறை சார்ந்த தொழில் கல்வி வகுப்புகளை மாணவிகளின் . ஆளுமைத்திறன், தொழில் நுட்பத்தினை மேம்படுத்தும் வகையில் சான்றிதழ் மற்றும் பட்டய சான்றிதழ்களை நல்கி அளித்து வருகிறது. ஸ்பெயின் போர்ச்சுகல், மலேசியா மற்றும் ரஷியா ஆகிய நாடுகளின் புகழ் வாய்ந்த கல்வி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை (MOU) மேற்கொண்டு ஆசிரியர், மாணவ பரிமாற்றம் மற்றும் ஆய்வுகளில் இணைந்து செயல்படல் ஆகியவற்றின் மூலம் சர்வதேச தரத்திலான கல்வியை அனைத்து தர மக்களுக்கும் கிடைப்பதற்கான வழிமுறைகளை செய்து வருகிறது.

பல்கலைக்கழக மானியக்குழுவின் (UGC) வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஏற்ப NPTEL, SPOKEN TUTORIAL போன்ற இணைய வழி படிப்புகளை பட்டப்படிப்புகளுடன் சேர்த்து மாணவர்கள் கற்றுத் திறன் சார்ந்து வேலைவாய்ப்புகளை பெற மாணவர்களை தனிப்பெரும் தகுதி உடையவர்களாக செயலாற்றி வருகிறது. வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப கற்றல்-கற்பித்தல் செயல்பாடுகளை அடுத்த கட்டத்திற்கு முன் நகர்த்தும் வகையில் E-content, கல்வி காணொலி ஆகிய வசதிகளையும் உருவாக்கி வருகிறோம். மாணவர்கள் பட்டப்படிப்பு முடித்த உடனே வேலை வாய்ப்புகளை பெற்றிட வேண்டும் என்கிற எண்ணத்தில் தொடர்ந்து கல்லூரி வளாகத்தில் நேர்முகத்தேர்வுகளை (campus interview) நடத்தி வருகிறது. மாணவிகளின் எதிர்காலத்திற்கான தகுதி, திறன் மேம்பாடு, தனித்துவம், சேவை மனப்பான்மை, வேலைவாய்ப்பு ஆகியவற்றை வளர்த்தெடுப்பதை இலக்காக கொண்டு கல்விப்பணியில் கலங்கரை விளக்கமாய் E.S.S.K. கல்விக்குழுமானது முழு முனைப்புடன் விழுப்புரம் மாநகரில் கல்வித் தொண்டு ஆற்றி வருகிறது.

தினத்தந்தி
ஆயுத பூஜை சிறப்பு மலர்
04-10-2022

Scanned with OKEN Scanner

# E.S GROUP OF INSTITUTIONS

Managed by ESSK - Villupuram

**CREATE FUTURE LEADERS**



(SINCE 1989 IN THE FIELD OF EDUCATION)

Chennai - Trichy Trunk Road, Villupuram, Pin: 605401 | Web: www.esu.org.in

தினத்தந்தி 04-10-2022

## THEIVANAI AMMAL COLLEGE FOR WOMEN (AUTONOMOUS)

UG.COURSES:- B.Sc. Psychology, Clinical Nutrition & Dietetics, Costume Design & Fashion, Computer Science, Bio-Chemistry, Physics, Chemistry, Mathematics, BCA, B.Com. General, BBA, B.A. Journalism & Mass Communication, Tamil & English, B.Com. With Computer Application & B.Com. International Accounting and Finance

PG.COURSES:- M.Sc. Computer Science, Bio-Chemistry, Chemistry, Physics & Mathematics. M.Com., M.A. Tamil & English.

**B.Ed**

RESEARCH PROGRAMMES:- Ph.D - Tamil, Commerce, Mathematics, Chemistry, Computer Science, English & Bio-Chemistry. M.Phil. Tamil, English, Commerce, Mathematics, Physics, Chemistry, Bio-Chemistry & Computer Science.

## E.S COLLEGE OF NURSING

B.Sc. Nursing, M.Sc. Nursing, P.B.B.Sc Nursing, DGNM, ANM & DMLT

## E.S ARTS AND SCIENCE COLLEGE (Co-Ed)

UG.COURSES:- BSc. Visual Communication, Interior Design & Decor, Biotechnology, Botany, Physics, Chemistry, Mathematics & Computer Science. B.Com. General, B.Com. With Computer Application, B.A. English & History, PG.COURSES:- M.Com.

## E.S POLYTECHNIC COLLEGE

Diploma in Civil Engineering, Diploma in Electronics and Communication Engineering, Diploma in Electrical and Electronics Engineering, Diploma in Mechanical Engineering & Diploma in Computer Technology.

அனைத்துக் கல்லூரிகளுக்கான மாணவர் சேர்க்கை தெய்வானை அம்மாள் கல்லூரியிலும் நடைபெறுகிறது.

**For Admission Call 04146-259674, 257103**

For Free Admission Registration Scan here.



விழுப்புரம், தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், சிறந்த பன்னாட்டு நிறுவனத்தில் வேலை பெறுவது குறித்த கருத்தரங்கில் பங்கேற்ற பெண்கள்.

# தெய்வானை மகளிர் கல்லூரியில் வேலை வாய்ப்பு கருத்தரங்கம்

**விழுப்புரம், நவ. 5–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பெண்களுக்கான வேலை வாய்ப்புகள் குறித்த கருத்தரங்கம் நடந்தது.

கல்லூரி கலையரங்கில், கணினி பயன்பாட்டியல் துறை மாணவிகளுக்காக நடந்த கருத்தரங்கில், பயன்பாட்டியல் துறை உதவி பேராசிரியை மோனிகா வரவேற்றார்.

சென்னை சிட்டி கார்ப் மூத்த மென்பொருள் துறை பொறியாளர் உமா தேவி, பயனுள்ள விண்ணப்பத்தை உருவாக்கி, தொழில்நுட்ப திறன்கள் மற்றும் விளக்கக் காட்சி திறன்களை மேம்படுத்துவது குறித்த ஆலோசனை வழங்கினார்.

வேலை வாய்ப்பு அறிவிப்பை பெறுவதற்கும், ஆள்சேர்ப்பு செய்பவர்களால் அறிவிக்கப்படுவதற்கான சுயவிபரத்தை உருவாக்குவதற்கான இணைப்புகளையும் குறிப்பிட்டார்.

கருத்தரங்கில் 177 இளங்கலை மற்றும் முதுகலை மாணவியர்கள் பங்கேற்றனர்.

தினமலர் – 05-11-2022

Scanned with OKEN Scanner



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், ஜவுளி மற்றும் பேஷன் தொழில்களில் வேலை வாய்ப்புகள் என்ற தலைப்பில் பயிலரங்கம் நடந்தது.

தினமலர்
06-11-2022

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் பயிலரங்கு

**விழுப்புரம், நவ. 6–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பணி வாய்ப்பு புலம் சார்பில், பெண்களுக்கான ஜவுளி மற்றும் பேஷன் தொழில்களில் வேலை வாய்ப்புகள் தலைப்பில் பயிலரங்கு நடந்தது.

கல்லூரியின் ஆடை வடிவமைப்பு மற்றும் ஆடை துறை மாணவிகளுக்காக நடத்தப்பட்ட கருத்தரங்கில், பேஷன் ஆடை மேலாண்மை துறை உதவி பேராசிரியர் அனிதாரேச்சல் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். முதலாம் ஆண்டு மாணவி காவியா வரவேற்றார்.

ஜவுளி மற்றும் பேஷன் துறையில் கிடைக்கும் வேலை வாய்ப்புகள் குறித்தும், தொழில் நுட்பத்திறன், தொடர்பு திறன், உடல்மொழி மற்றும் பேஷன் டிசைனிங் திறன் குறித்து விளக்கப்பட்டது.

மாணவி ஆயிஷாபேகம் நன்றி கூறினார்.

Scanned with OKEN Scanner




உலகளாவிய கற்றல் திட்டத்தில் பங்கேற்பதற்காக, மலேசியா ஏ.ஐ.எம்.எஸ்.டி., பல்கலைக்கழகத்திற்கு செல்லும் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மாணவிகளை, இ.எஸ்.எஸ்.கே., கல்வி குழுமத்தின் நிர்வாக தலைவர் செந்தில்குமார் வாழ்த்தி வழியனுப்பினார்.

# தெய்வானை அம்மாள் கல்லூரி மாணவிகள் மலேசியா பயணம்

**விழுப்புரம், நவ. 17–**

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மாணவிகள் மலேசியா பல்கலைக்கழகத்திற்கு பயணம் மேற்கொண்டனர்.

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உலகளவில் தரமான கல்வி அளிக்கும் வகையில், மலேசியா ஏ.ஐ.எம்.எஸ்.டி. பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. அதன் அடிப்படையில், மாணவிகளுக்கு சான்றிதழ் படிப்புகளுக்கு கல்லூரி ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த 14ம் தேதி முதல் 25ம் தேதி வரை, ஏ.ஐ.எம்.எஸ்.டி. பல்கலைக்கழகத்தில் நடக்கும் உலகளாவிய கற்றல் திட்டத்தில் பங்கேற்பதிற்காக தெய்வானை அம்மாள் கல்லூரியை சேர்ந்த 11 மாணவிகளுடன், புல முதன்மையர் தனலட்சுமி மலேசியா புறப்பட்டார். இப்பயணம் மூலம் மலேசியா பல்கலைக்கழக பேராசிரியர்களின் விரிவுரைகள், திறன்சார்ந்த பயிற்சிகள், ஆய்வக பயன்பாடுகள், தொழில்துறை முன்னேடுப்புகள், கலாசார நிகழ்வுகள் மற்றும் கற்றலை இதன் மூலம் மாணவிகள் பெற உள்ளனர்.

இந்த உலகளாவிய கற்றலுக்கு பங்களிப்பு அளித்த இ.எஸ்.எஸ்.கே. கல்வி குழுமத்தின் நிர்வாக தலைவர் செந்தில்குமாருக்கு, மாணவிகள் மற்றும் பெற்றோர் வாழ்த்து தெரிவித்தனர்.

தினமலர் - 17-11-2022

Scanned with OKEN Scanner




விழுப்புரம்

# தெய்வானை அம்மாள் கல்லூரி மாணவிகள் மலேசியா பயணம்

விழுப்புரம், நவ.18-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உலகளவில் தரமான கல்வி அளிக்கும் வகையில் மலேசியா ஏ.ஐ.எம்.எஸ்.டி. பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. அதன் அடிப்படையில் மாணவிகளுக்கு சான்றிதழ் படிப்புகளுக்கு கல்லூரி ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த 14-ந் தேதி முதல் 25-ந் தேதி வரை ஏ.ஐ.எம்.எஸ்.டி. பல்கலைக்கழகத்தில் நடக்கும் உலகளாவிய கற்றல் திட்டத்தில் பங்கேற்பதற்காக தெய்வானை அம்மாள் கல்லூரியை சேர்ந்த 11 மாணவிகளுடன் புல முதன்மையர் தனலட்சுமி மலேசியா புறப்பட்டார். இப்பயணம் மூலம் மலேசியா பல்கலைக்கழக பேராசிரியர்களின் விரிவுரைகள், திறன் சார்ந்த பயிற்சிகள், ஆய்வக பயன்பாடுகள், தொழில்துறை முன்னெடுப்புகள், கலாசார நிகழ்வுகள் மற்றும் கற்றலை இதன் மூலம் மாணவிகள் பெற உள்ளனர். இந்த உலகளாவிய கற்றலுக்கு பங்களிப்பு அளித்த இ.எஸ்.எஸ்.கே. கல்விக்குழுமத்தின் நிர்வாக தலைவர் செந்தில்குமாருக்கு மாணவிகள் மற்றும் பெற்றோர் வாழ்த்து தெரிவித்தனர்.

தினத்தந்தி - 18-11-2022

Scanned with OKEN Scanner

தினமணி 28-11-2022

# பயிலரங்கம்

**விழுப்புரம், நவ. 28**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தேர்வுப் பயிலரங்கம்நடந்தது.

இந்த தேர்வுப் பயிலரங்க நிகழ்விற்கு கல்லூரியின் வணிகவியல், உயிர்வேதியியல் மற்றும் கணினி அறிவியல் துறையின் பேராசிரியர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இயற்பியல் துறை உதவிப் பேராசிரியர் மற்றும் பணிவாய்ப்புப்புல அலுவலர் முத்துராஜா பயிலரங்க விளக்கவுரை வழங்கினார். சிறப்பு விருந்தினர்கள் நெட் / செட் தேர்வுகளுக்கான தயாரிப்பு குறிப்புகள் குறித்து பேசினர். இந்நிகழ்வில் 135 இறுதியாண்டு முதுகலை மாணவியர்கள் பங்கேற்றனர்.

Scanned with OKEN Scanner

# மகளிர் கல்லூரியில் தரநிலைகள் குறித்த ஸ்டாண்டர்ட்ஸ் பேரவை தொடக்கம்

**விழுப்புரம், நவ. 28–**

விழுப்புரம், தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தரநிலைகள் குறித்த ஸ்டாண்டர்ட் பேரவை தொடங்கப்பட்டது.

நுகர்வோர் விவகார அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய தரநிலைகள் பணியகம், மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே பொருட்களின் தரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தரநிலைகள் குறித்த பேரவையை உருவாக்குகிறது.

அதன்படி 2022–23ம் கல்வியாண்டில் இருந்து, விரிவாக்க நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்திய தரநிலைகள் பணியக ஒப்புதலுடன், விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஸ்டாண்டர்ட் பேரவை தொடங்கப்பட்டது.




■ விழுப்புரம், தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தரநிலைகள் குறித்த ஸ்டாண்டர்ட் பேரவை தொடங்கப்பட்டது.

கல்லூரியில் நடந்த இந்நிகழ்ச்சிக்கு சென்னை கிளை அலுவலக இணை இயக்குநர் கண்ணன் கோவிந்தராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, இந்திய தரநிலைகள் பணியகம், பி.ஐ.எஸ்., இன் செயல்பாடுகள், பிராந்திய அலுவலகங்கள் மற்றும் ஆய்வகங்கள் பற்றி வரையறுத்து கூறினார். மேலும், தயாரிப்பு சான்றிதழ், கட்டாய சான்றிதழ், பதிவு, ஹால் மார்க்கிங் மற்றும் பியூரோ ஆஃப் இந்தியன் ஸ்டாண்டர்ட்ஸ் கேர்–ஆப் பற்றி அவர் எடுத்துரைத்தார்.

கல்லூரி முதல்வர் அகிலா சிறப்புரை ஆற்றினார். ஆங்கிலத்துறை பேராசிரியர் காஞ்சனா வரவேற்றார். ஸ்டாண்டர்ட்ஸ் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் புனிதா குமாரி நன்றி கூறினார். பேராசிரியர்கள், மாணவிகள் பலர் கலந்துகொண்டனர்.

தினமலர் - 28-11-2022

Scanned with OKEN Scanner




## தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# தரநிலைகள் குறித்த ஸ்டாண்டர்ட்ஸ் பேரவை தொடக்க விழா

விழுப்புரம், நவ.30-

நுகர்வோர் விவகார அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய தரநிலைகள் பணியகம், மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே பொருட்களின் தரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த பள்ளி- கல்லூரிகளில் தரநிலைகள் குறித்த பேரவையை உருவாக்குகிறது. அதன்படி 2022-23-ம் கல்வியாண்டில் இருந்து விரிவாக்க நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்திய தரநிலைகள் பணியக ஒப்புதலுடன் விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தரநிலைகள் குறித்த ஸ்டாண்டர்ட்ஸ் பேரவை தொடக்க விழா நடைபெற்றது. இதற்கு சென்னை கிளை அலுவலக இணை இயக்குனர் கண்ணன் கோவிந்தராஜன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு இந்திய தர நிலைகள் பணியகம், பி.ஐ.எஸ்.-ன் செயல்பாடுகள், பிராந்திய அலுவலகங்கள் மற்றும் ஆய்வகங்கள் பற்றி வரையறுத்து பேசினார். மேலும் தயாரிப்பு சான்றிதழ், கட்டாய சான்றிதழ், பதிவு, ஹால் மார்க்கிங், பியூரோ ஆப் இந்தியன் ஸ்டாண்டர்ட்ஸ் கேர்-ஆப் பற்றி அவர் எடுத்துரைத்தார். கல்லூரி முதல்வர் அகிலா சிறப்புரையாற்றினார். முன்னதாக ஆங்கிலத்துறை பேராசிரியர் காஞ்சனா வரவேற்றார். முடிவில் ஸ்டாண்டர்ட்ஸ் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் புனிதா குமாரி நன்றி கூறினார்.

தினத்தந்தி - 30-11-2022

Scanned with OKEN Scanner




விழுப்புரத்தில்

# பெண் குழந்தைகளை காப்போம் திட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி

விழுப்புரம், டிச.2- விழுப்புரம் மாவட்ட பள்ளிக் கல்வித்துறை சார்பில் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. நிகழ்ச்சியை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்ரீநாதா தொடங்கி வைத்து பள்ளியில் அதிக பெண் குழந்தைகளை சேர்க்கை செய்த 10 தலைமை ஆசிரியர்களுக்கும், பெண் குழந்தைகளுக்கான சைல்டு பிரண்ட்லி பள்ளி விருதை 10 பள்ளிகளுக்கும் வழங்கி கவுரவித்தார். தொடர்ந்து, கல்வி செயல்பாடுகள், கலை, விளையாட்டுத் துறைகளில் சிறந்து விளங்கியவர்கள், மாவட்ட அளவில் ஓவியம், பேச்சு, கட்டுரை, வாசகம் எழுதும் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி, மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் யசோதாதேவி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ணப்பிரியா ஆகியோர் பரிசு வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சமூகநல அலுவலர் ராஜம்மாள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலர் அன்பழகி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் நீலம்மாள், மாவட்ட கல்வி அலுவலர்கள் (தொடக்க நிலை) மணிமொழி, கவுசர், மாவட்ட கல்வி அலுவலர்கள் (இடைநிலை) கிருஷ்ணன், சிவசுப்பிரமணியன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

தினத்தந்தி - 02-12-2022

Scanned with OKEN Scanner



## மலேசியாவில் 10 நாள் பயிற்சி முடித்த

# தெய்வானை அம்மாள் கல்லூரி மாணவிகளுக்கு பாராட்டு

விழுப்புரம், டிச.4-
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, மாணவிகளின் உலகளாவிய தரமான கல்விக்கு எப்போதும் பெரும்பங்கு வகிக்கிறது. அதன் ஒரு பகுதியாக மலேசியாவில் உள்ள ஏ.ஐ.எம்.எஸ்.டி. பல்கலைக்கழகத்திற்கு உலகளாவிய கற்றல் திட்டத்தின் ஒப்பந்த அடிப்படையில் 10 நாட்கள் சான்றிதழ் படிப்பிற்கு சென்று இருந்தனர். தெய்வானை அம்மாள் கல்லூரியின் கணிதத்துறை தலைவர் தனலட்சுமி தலைமையில் 11 மாணவிகள் உலகளாவிய கற்றல் பயணம் மேற்கொண்டனர். அவர்கள் திறம்பட பயிற்சியை முடித்து விழுப்புரம் திரும்பினர். அவர்களை கல்லூரி செயலாளர் செந்தில்குமார் பாராட்டினார்.

மேலும் அவர் கூறுகையில், கல்லூரி செயல்படுத்தி உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் நோக்கங்கள், உயர்கல்வியில் பெண்கள் அடைய வேண்டிய இலக்குகள், உலகளாவிய கற்றல் பயணத்தின் தனி சிறப்புகள், பெண் கல்வியில் முதன்மையான சகாப்தம் ஆகும். இனிவரும் காலங்களில் உலகம் முழுவதிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் நமது கல்லூரி மாணவிகள் தனிப்பெரும் கற்றல் பங்களிப்பானது தொடரும் என்றார்.

தினத்தந்தி - 04-12-2022

Scanned with OKEN Scanner

# தெய்வானை அம்மாள் கல்லூரி மாணவிகளுக்கு பாராட்டு



மலேஷியா ஏ.ஐ.எம்.எஸ்.டி. பல்கலைக் கழகத்தில் சான்றிதழ் படிப்பிற்காக சென்று திரும்பிய தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மாணவிகளை, இ.எஸ்.எஸ்.கே. கல்விக் குழும நிர்வாகத் தலைவர் செந்தில்குமார் பாராட்டினார்.

**விழுப்புரம், டிச. 5–** மலேஷியா சென்று திரும்பிய தெய்வானை அம்மாள் கல்லூரி மாணவிகளுக்கு பாராட்டு விழா நடந்தது.

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி கல்வி மேம்பாட்டிற்காக, மலேஷியாவில் உள்ள ஏ.ஐ.எம்.எஸ்.டி., பல்கலைக் கழகத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. அதன்படி, கல்லூரி மாணவியர்கள் 11 பேர், கடந்த நவம்பர் 14ம் தேதி முதல் 25ம் தேதி வரை சான்றிதழ் படிப்புக்காக கல்லூரி கணிதத்துறை தலைவர் தனலட்சுமியுடன் மலேஷியா சென்றனர்.


அங்கு, உலக அளவிலான கற்றல் பயணத்தை திறன்பட முடித்து விழுப்புரம் திரும்பினர்.

மாணவிகளை இ.எஸ்.எஸ்.கே., கல்விக் குழும நிர்வாகத் தலைவர் செந்தில்குமார் வாழ்த்தி பாராட்டினார். நிகழ்ச்சியில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவியர்கள் பங்கேற்றனர்.

Scanned with OKEN Scanner

தினமலர் 07-12-2022

# தெய்வானை மகளிர் கல்லூரியில் எயிட்ஸ் விழிப்புணர்வு நிகழ்ச்சி




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி வளாகத்தில், எச்.ஐ.வி.,யை குறிக்கும் ரெட் ரிப்பன் சின்னத்தை, 500 மாணவிகள் மூலம் உருவாக்கினர்.


**விழுப்புரம், டிச. 7–** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், எயிட்ஸ் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

அதனையொட்டி, கல்லூரி வளாகத்தில், எச்.ஐ.வி., அடையாளத்தை குறிக்கும் ரெட் ரிப்பன் சின்னத்தை, 500 மாணவியர்கள் மூலம் உருவாக்கி, எச்.ஐ.வி.,யால் பாதிக்கப்பட்டவர்களை சமமாக ஏற்றுக் கொள்வதன் முக்கியத்துவம் மற்றும் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மேலும், மாணவிகள் எச்.ஐ.வி., குறித்த விழிப்புணர்வு பதாகைகளை, கல்லூரி அறிவிப்பு பலகையில் காட்சிப்படுத்தினர்.

Scanned with OKEN Scanner

# பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினம்



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், பெண்களுக்கு எதிரான சர்வதேச வன்முறை ஒழிப்பு நாள் நிகழ்ச்சி நடந்தது.

**விழுப்புரம், டிச. 9–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், பெண்களுக்கு எதிரான சர்வதேச வன்முறை ஒழிப்பு நாள் நிகழ்ச்சி நடந்தது.

உலகம் முழுவதும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை ஒழிக்க ஆண்டுதோறும் சர்வதேச தினம் அனுசரிக்கப்படுகிறது.

அதன்படி, விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில், கல்லூரி ஆசிரியர்கள், மாணவியர்கள் பங்கேற்றனர்.

உளவியல் துறை உதவி பேராசிரியர் முகமது அக்ரீத் வரவேற்றார். பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான உளவியல் யுக்திகள் குறித்து, டாக்டர் சுதா சிறப்புரையாற்றினார்.

கணினி அறிவியல் துறை உதவி பேராசிரியை கலைவாணி நன்றி கூறினார்.

தினமலர் - 09/12/2022

Scanned with OKEN Scanner

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினம்



விழுப்புரம், டிச.10-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பெண்களுக்கு எதிரான சர்வதேச வன்முறை ஒழிப்பு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வந்த அனைவரையும் உளவியல் துறை உதவி பேராசிரியர் முகமதுஅக்ரீத் வரவேற்றார். டாக்டர் சுதா கலந்துகொண்டு, பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுப்பதற்கான உளவியல் யுக்திகள் குறித்து சிறப்புரையாற்றினார்.

இதில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் கணினி அறிவியல் துறை உதவி பேராசிரியர் கலைவாணி நன்றி கூறினார்.

தினத்தந்தி - 10.12.2022

Scanned with OKEN Scanner

# விழுப்புரம் மகளிர் கல்லூரியில் முன்னாள் மாணவிகள் கருத்தரங்கு



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், முன்னாள் மாணவிகள் பங்கேற்ற கருத்தரங்கு நிகழ்ச்சி நடந்தது.

**விழுப்புரம், டிச. 10–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி தமிழாய்வுத் துறை சார்பில், முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை ஏற்றுக் கொள்ளுதல் குறித்த கருத்தரங்கு நிகழ்ச்சி நடந்தது.

முன்னாள் மாணவிகள் பங்கேற்ற கருத்தரங்கிற்கு, தமிழாய்வுத் துறை உதவி பேராசிரியை ஹேமலதா வரவேற்றார். தமிழாய்வுத் துறைத் தலைவர் மணிகண்டன் நோக்கவுரையாற்றினார்.

சென்னை 'ஷ்ரஸ் நித்யம்' செயற்பாட்டு மேலாளர் சுவேதா, தமிழ் படிப்பதன் அவசியம், முக்கியத்துவம், நூலகத்தின் பயன், தேடலின் நோக்கம், அச்சத்தை கலைத்து, மேடையைப் பயன்படுத்துதல் உள்ளிட்டவற்றை விளக்கினார்.

உதவி பேராசிரியை வனிதா நன்றி கூறினார்.

தினமலர் 10.12.2022

Scanned with OKEN Scanner

# புரிந்துணர்வு ஒப்பந்தம்



தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, வேலூர் தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

**விழுப்புரம், டிச. 23–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, வேலூர் வி.ஐ.டி., பல்கலைக்கழகத்துடன் கல்விக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது.


இ.எஸ்., கல்விக் குழும செயலாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். வேலூர், தொழில்நுட்ப பல்கலைக்கழக வடிவமைப்பு புல பேராசிரியர்கள் விவேக், இயக்குனர் விஜயகுமார் மற்றும் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி வேலை வாய்ப்பு அலுவலர் முத்துராஜா முன்னிலை வகித்தனர்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கம், மாணவர் மற்றும் ஆசிரியர் பரிமாற்ற திட்டம், வேலை வாய்ப்பிற்கு இணைந்து செயல்படுதல். கூட்டு கருத்தரங்குகள் நடத்துதல். இணைய கருத்தரங்கங்கள், பயிற்சிப் பட்டறைகள் நடத்துதல். புதுமையான திட்டங்களை இணைந்து உருவாக்குதல் ஆகியவை இருக்கும்.

தொடர்ந்து நடந்த புரிந்துணர்வு கூட்டத்தில் ஆராய்ச்சி, ஆலோசனை, பாடத்திட்ட வடிவமைப்பு ஆகியவற்றில் நிகழ்த்தப்பட்டுள்ள புதுமைகள் குறித்து கலந்துரையாடல் நடந்தது.

தினமலர் - 23.12.2023

Scanned with OKEN Scanner




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் வாசகர் அமைப்பு துவக்க விழா நடந்தது.

# விழுப்புரம் மகளிர் கல்லூரியில் வாசகர் அமைப்பு துவக்க விழா

**விழுப்புரம், டிச. 13–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் வாசகர் அமைப்பு துவக்க விழா நடந்தது.

கல்லூரி கலையரங்கில் நடந்த நிகழ்ச்சியில் வாசகர் அமைப்பின் தலைவர் மாணவி உமாஹனி வரவேற்றார். செயலாளர் மாணவி ஹேமாவதி ஆண்டறிக்கை வாசித்தார். கல்லூரி நூலகர் அன்புச் செல்வி அறிமுக உரையாற்றினார்.

திருச்சி புனித ஜோசப் கல்லூரியின் நூலகர் துரைராஜன் சிறப்புரையாற்றினார். வாசகர் அமைப்பின் பொருளாளர் மாணவி ஜீவா நன்றி கூறினார்.

தினமலர் - 13-12-2022

Scanned with OKEN Scanner

# தெய்வானை அம்மாள் கல்லூரி இயற்பியல் துறை கருத்தரங்கு



விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரி முதுகலை ஆராய்ச்சி இயற்பியல் துறை சார்பில் கருத்தரங்கு நடந்தது.

**விழுப்புரம், ஏப். 23–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரி முதுகலை ஆராய்ச்சி இயற்பியல் துறை சார்பில், கருத்தரங்கு நடந்தது.

கல்லூரி கலையரங்கில் நடந்த நிகழ்ச்சியில் ஆற்றல், சுற்றுச்சூழல் மற்றும் உயிரியல் மருத்துவப் பயன்பாடுகளுக்கான செயல்பாட்டு நானோ பொருள்கள் பற்றிய ஆராய்ச்சி முறை குறித்த சிறப்பு கருத்துரை வழங்கப்பட்டது. இயற்பியல் துறை பேராசிரியர் முத்துவேல் அறிமுக உரை நிகழ்த்தினார்.

ரங்கசாமி கலை, அறிவியல் கல்லூரியின் இயற்பியல் துறை தலைவர் சுரேஷ்குமார் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி, உலோக ஆக்சைடு, நானோ துகள்களின் தொகுப்பின் முக்கியத்துவத்துவம் குறித்து விளக்கினார்.

உலோகஆக்சைடுநானோ துகள்கள் தயாரித்தல் மற்றும் சோலார் செல்கள், ஒளி வினையூக்கி மற்றும் உயிரியல் மருத்துவப் பயன்பாடுகள் போன்ற உலோக ஆக்சைடு நானோ துகள்களின் பயன்பாடுகள் ஆகியவை குறித்து விரிவாக கருத்துரை வழங்கினார்.

இயற்பியல் துறையின் இளங்கலை, முதுகலை மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர். பேராசிரியர் அழகரசி நன்றி கூறினார்.

தினமலர் - 23.04.2023

Scanned with OKEN Scanner




### விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரி சார்பில்

# மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வு நிகழ்ச்சி

விழுப்புரம், மே.13-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்வியியல் கல்லூரி, தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவை இணைந்து நேற்று விழுப்புரம் பழைய பஸ் நிலையம் அருகில் மீண்டும் மஞ்சப்பை என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தியது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் முருகன் தலைமை தாங்கினார். மாசு கட்டுப்பாட்டு வாரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் செல்வக்குமார் கலந்துகொண்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு மஞ்சப்பை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் அவர் மஞ்சப்பையின் அவசியத்தையும், நெகிழியால் ஏற்படும் பாதிப்புகளையும் விளக்கி கூறினார்.

பின்னர் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவிகள், பொதுமக்களுக்கு மஞ்சப்பையை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும் நம்ம ஊரு சூப்பர் திட்டத்தின் கீழ் அப்பகுதியை சுத்தம் செய்தனர்.

தினத்தந்தி - 13.05.2023

Scanned with OKEN Scanner

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி

(தன்னாட்சி)

(Affiliated to the Annamalai University, Chidambaram - Tamil Nadu)

Villupuram - Tamil Nadu, Pincode - [illegible], Phone - [illegible], Website - [illegible] | Email - [illegible]

20% அனைத்து பருவங்களுக்கும் கூடுதலாக 25% முதல் பருவத்திற்கும்
ஜூன் 8-ம் தேதிக்குள் சேர்ப்பவர்களுக்கு கட்டணச் சலுகை வழங்கப்படும்
ஜூன் 8 க்கு பிறகு அனைத்து பருவத்திற்கும் 20% கட்டண சலுகை வழங்கப்படும்.

| பயிற்றுவிக்கப்படும் பாடப்பிரிவுகள் | கட்டண விவரம் | |
|---|---|---|
| | முதலாம் பருவத்திற்கு | பருவம் முதல் … பருவம் வரை |
| • B.A Tamil | 7,250 | 7,250 |
| • B.A English | 9,700 | 9,700 |
| • B.Sc Physics | 9,700 | 9,700 |
| • B.Sc Mathematics | 9,700 | 9,700 |
| • B.Sc Chemistry | 9,700 | 9,700 |
| • B.Sc Biochemistry | 9,700 | 9,700 |
| • B.Sc Computer Science | 12,100 | 17,600 |
| • B.C.A | 12,375 | 18,000 |
| • B.Com | 15,235 | 17,600 |
| • B.Com with Computer Application | 15,235 | 17,600 |
| • B.B.A | 10,120 | 14,720 |
| • B.Sc Psychology | 11,825 | 17,200 |
| • B.Sc Clinical Nutrition & Dietetics | 11,825 | 17,200 |
| • B.Sc Costume Design & Fashion | 11,825 | 17,200 |
| • B.A Journalism & Mass Communication | 9,900 | 14,400 |
| • B.Sc Information Technology* | 11,825 | 17,200 |

*Subject to university approval

சேர்க்கைக்கான தொடர்பிற்கு - 04146 259674, 257103


தினமணி - 28.05.2023

Scanned with OKEN Scanner

*Choose the Right College, Join in TACW and Enrich your Career with Computer Education*

The only College in Villupuram Dt. with Global Exchange Programme & offers Professional Value Added Courses in association with INNOPOLIS UNIVERSITY - RUSSIA

# THEIVANAI AMMAL COLLEGE FOR WOMEN
**(AUTONOMOUS), Villupuram.**

**Hearty congratulations to the students placed in**

Tech Mahindra & tcs

Salary Package Rs.5 lakhs Per Annum

Unique Features

- Artificial Intelligence & Robotics
- Big Data Analytics & Cyber Security
- Blockchain Technology
- Augumented Virtual Reality
- Internet of Things & Machine Learning

**Admission Contact**
**04146 - 259674, 257103**

* Paid within Date

## Scholarship 45%-50% Till June 8th 2023

| Courses Offered | Semester - I * | Semester II - VI * |
|---|---|---|
| BCA | Rs. 12,375 | Rs. 18,000 |
| B.Sc Computer Science | Rs. 12,100 | Rs. 17,600 |
| B.Sc Information Technology | Rs. 11,825 | Rs. 17,200 |
| M.Sc Computer Science | Rs. 12,650 | Rs. 18,400 |

28.05.2023 - தினமலர்

Scanned with OKEN Scanner

# மீண்டும் மஞ்சள் பை விழிப்புணர்வு



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் பழைய பஸ் நிலையத்தில் பொதுமக்களிடம் மஞ்சள் பை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

**விழுப்புரம், மே 15–**

விழுப்புரத்தில் மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் தெய்வானை அம்மாள் கல்வியியல் கல்லூரி, மகளிர் கல்லூரி சார்பில் மீண்டும் மஞ்சள் பை விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

விழுப்புரம் பழைய பஸ் நிலையம் பகுதியில் நடந்த நிகழ்ச்சிக்கு, கல்லூரி முதல்வர் முருகன் தலைமை தாங்கினார். மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் செல்வகுமார் தொடங்கி வைத்தார்.

அப்போது அவர், மஞ்சள் பையின் அவசியத்தையும், பிளாஸ்டிக்கினால் ஏற்படும் பாதிப்புகளையும், மாணவிகளுக்கு விளக்கிக் கூறினார்

தொடர்ந்து கல்லூரியின் நாட்டு நலப்பணி திட்ட மாணவிகள், விழுப்புரம் பஸ் நிலையத்தில் மஞ்சள் பையை பொதுமக்களுக்கு வழங்கி, விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

மேலும், நம்ம ஊரு சூப்பரு திட்டத்தின் கீழ், அப்பகுதியை நாட்டு நலப்பணி திட்ட மாணவிகள் சுத்தம் செய்தனர்.

தினமலர் - 15.05.2023

Scanned with OKEN Scanner

தினதந்தி 27.08.2023



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மையத்தில் நடந்த சப்-இன்ஸ்பெக்டர் பணிக்கான எழுத்து தேர்வை விழுப்புரம் சரக போலீஸ் டி.ஐ.ஜி. ஜியாவுல்ஹக், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சசாங் சாய் ஆகியோர் பார்வையிட்ட போது எடுத்த படம்.

# போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பணிக்கான எழுத்து தேர்வு

## 5 மையங்களில் நடந்தது

விழுப்புரம், ஆக.27-

விழுப்புரம் மாவட்டத்தில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பணிக்கான எழுத்து தேர்வு 5 மையங்களில் நடந்தது.

### சப்-இன்ஸ்பெக்டர் பணிக்கான தேர்வு

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தின் சார்பில் 749 போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் (621 ஆண்கள், 128 பெண்கள்) காலிப்பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு நேற்று தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது.

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டத்தில் விழுப்புரம் சரஸ்வதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, வி.ஆர்.பி. மேல்நிலைப்பள்ளி, ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, அரசூர் வி.ஆர்.எஸ். பொறியியல் கல்லூரி ஆகிய 5 தேர்வு மையங்களில் நடந்தது.

### ஆர்வமுடன் எழுதினர்

நேற்று காலை பொது அறிவுத்தேர்வு நடைபெற்றது. இதற்காக தேர்வு எழுத வருபவர்கள் அனைவரும் காலை 8.30 மணிக்குள் தேர்வு மையத்திற்குள் இருக்க வேண்டும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததால் குறிப்பிட்ட நேரத்திற்குள் வந்தவர்கள் மட்டும் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர். காலை 8.30 மணிக்கு பிறகு வந்தவர்கள் தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்படவில்லை. அதுபோல் தேர்வர்களின் தேர்வுக்கூட சீட்டை சரிபார்த்து தேர்வு மையத்திற்குள் உள்ளே அனுப்பி வைத்தனர். செல்போன், ப்ளூடூத் போன்ற எந்தவொரு எலக்ட்ரானிக் சாதனங்களையும் எடுத்துச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது.

இத்தேர்வானது காலை 10 மணிக்கு தொடங்கி பகல் 12.30 மணி வரை நடைபெற்றது. இத்தேர்வை எழுதுவதற்காக 4,834 ஆண்களும், 1,368 பெண்களும் என மொத்தம் 6,202 பேர் விண்ணப்பித்தனர். இதில் 4,501 ஆண்களும், 805 பெண்களும் ஆக மொத்தம் 5,306 பேர் ஆர்வமுடன் வந்திருந்து தேர்வை எழுதினர். விண்ணப்பித்தவர்களில் 681 ஆண்களும், 215 பெண்களும் என 896 பேர் தேர்வு எழுத வரவில்லை.

### மாலையில்...

இத்தேர்வு முடிந்ததும் மாலை 3.30 மணிக்கு தமிழ் தேர்வு நடந்தது. இத்தேர்வை எழுத 5,323 ஆண்களும், 1,467 பெண்களும் என மொத்தம் 6,790 பேர் விண்ணப்பித்தனர். இவர்களில் 4,510 ஆண்களும், 1,234 பெண்களும் ஆக மொத்தம் 5,744 பேர் ஆர்வமுடன் வந்திருந்து தேர்வை எழுதினர். விண்ணப்பித்தவர்களில் 813 ஆண்களும், 233 பெண்களும் என 1,046 பேர் தேர்வு எழுத வரவில்லை.

இத்தேர்வானது மாலை 5.10 மணிக்கு முடிவடைந்தது. தேர்வு பாதுகாப்பு பணி மற்றும் தேர்வு மைய கண்காணிப்பு பணிகளில் 1,031 போலீசார் ஈடுபட்டனர்.

### அதிகாரிகள் பார்வையிட்டனர்

இதனிடையே விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மையத்தில் நடந்த தேர்வை விழுப்புரம் சரக போலீஸ் டி.ஐ.ஜி. ஜியாவுல்ஹக், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சசாங் சாய் ஆகியோர் பார்வையிட்டனர். தொடர்ந்து, இன்று (ஞாயிற்றுக்கிழமை) காவல்துறையில் 5 ஆண்டுகள் பணி முடித்த 45 வயதுக்கு கீழ் உள்ளவர்களுக்கு 20 சதவீத இடஒதுக்கீட்டின் அடிப்படையில் சப்-இன்ஸ்பெக்டர் பணிக்கான தேர்வு காலை 10 மணி முதல் பகல் 12.30 மணி வரை விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி தேர்வு மையத்தில் நடக்கிறது. இத்தேர்வை 756 ஆண்களும், 158 பெண்களும் என மொத்தம் 914 போலீசார் எழுத உள்ளனர்.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 06.09.2024

# மாணவிகளுக்கு பரிசு



தேசிய விளையாட்டு தின விழாவை முன்னிட்டு விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டபோது எடுத்த படம். இதில் கல்லூரியின் தேசிய மாணவர் படை இணை அலுவலர் விஜயசாமுண்டீஸ்வரி, முனைவர் அகிலா, உடற்கல்வி ஆசிரியர் விஜயலட்சுமி மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

Scanned with OKEN Scanner